DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.15/2024**

Deposition of witness for Prosecution அ.சா.8

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாண்டியன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | அரிராமன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் மதுரை மாநகரில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அமல்ராஜ் அவர்களையும் அவருடைய எழுத்துக்களையும் எனக்கு நன்கு தெரியும். எனவே இவ்வழக்கில் அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.11.2023 ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் பணியில் இருந்தபோது அ.சா.1 ராஜேஸ்வரி கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.108/2023, பிரிவு 294(பி),323 IPC and 4 of TNPHW Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்துள்ளார். (**மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 நபர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை என் பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பை தொடர்ச்சியான புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் எதிரிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜராகதாதால் எதிரியை கடந்த 03.12.2023 ம் தேதி மதியம் 12 மணிக்கு சடையன்காடு விலக்கில் வைத்து எதிரியை காரணம் கூறி கைது செய்து மாண்புமிகு உயர்நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நிலையம் கொண்டுவந்து பாராவிடம் ஒப்படைத்தேன். எதிரி பிணைமுறி ஆவணம் கொடுக்க முன்வந்தபடியாலும் மேலும் குற்றம் 7 வருடங்களுக்கு முற்பட்ட தண்டனை உள்ள குற்றம் என்பதாலும் உயர் அதிகாரியின் உத்தவை பெற்று தக்க இரு நபர் ஜாமீனில் எதிரியை விடுவித்தேன். பின்னர் 18.12.2023 ம் தேதி இவ்வழக்கின் வாதி ராஜேஸ்வரி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. சர்மியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். (**மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார். பின்னர் வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் அமல்ராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எதிரி மீது

294(பி),323 இதச பிரிவுகள் மற்றும் 4 of TNPHW Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

புகாரை யார் எழுதினார்கள் என்று எனது புலன்விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். புகாரில் அ.சா.1 எதிரி எத்தனை நபர்கள் என்று சொல்லியுள்ளார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய கடைகளும் வீடுகளும் உள்ளது என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் கடைகள் இல்லை வீடுகள் இருந்தது. மேற்படி வீடுகளில் உள்ள யாரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் யாரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை. சம்பவம் நடந்திருந்தால் அருகில் உள்ளவர்கள் சாட்சி சொல்ல வந்திருப்பார்கள் என்றும் மேற்படி சம்பவம் நடக்காததால்தான் யாரும் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் அ.சா.1ன் உறவினர்களா என்றால், அனைத்து சாட்சிகளும் உறவினர்கள் இல்லை. சம்பவம் 25.11.2023 ம் தேதி நடந்துள்ளது. 1 முதல் 9 வரை உள்ள சாட்சிகளை எங்கு எந்த தேதியில் வைத்து விசாரித்தேன் என்றால் 30.11.2023 ம் தேதி 13 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அமல்ராஜ் விசாரித்துள்ளார். நான் விசாரித்தபோது சாட்சிகள் அவரிடம் சொன்னதையே சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பட்டியல் சாட்சி 11 ராதிகா எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து மருத்துவமனைக்கு சென்றார் என்பதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா

என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அமல்ராஜ் சொன்னதன்படி 25.11.2023 ம் தேதி 20.00 மணிக்கு மருத்துவமனை சென்றுள்ளார். சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அப்படி நடந்திருந்தால் அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களை சாட்சிகளாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கையும் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.